செய்தி வெளியீடு எண்: 310 நாள் : 28.06.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க (27.6.2016) அன்று மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி கோட்டம், மல்லியாங்குப்பத்தில் அரசு மானியத்துடன் வளர்க்கப்பட்டு வரும் கால்நடை தீவனமான நாட்டுச்சோளப்புல் வளர்ப்புப் பண்ணையை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார், அந்நிகழ்வின் போது அப்பண்ணை விவசாயிகளிடம் அதன் வளர்ப்பு, பயன்பாடுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் பற்றி கேட்டறிந்தார்.

மேலும் கும்மிடிப்பூண்டி வட்டம், கவரப்பேட்டையில் புதிதாக கட்டப்பட்டு இயங்கி வரும் கால்நடை மருந்தகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பார்வையிட்டு அங்கு பணியில் இருந்த கால்நடை உதவி மருத்துவரிடம் அங்கு மேற்கொள்ளும் சிகிச்சைகள், இருப்பில் உள்ள மருந்துகள், அங்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து பின்னர்,

கும்முடிப்பூண்டி வட்டம், குருவாச்சேரி ஊராட்சி, நங்கப்பள்ளம் கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடுகள் பெற்றுள்ள பயனாளிகளிடம், அவற்றை வளர்ப்பு விவரத்தினையும் மற்றும் கால்நடைகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்றும், கால்நடை உதவி மருத்துவர்களிடம் இக்கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சைகளை உடனுக்குடன் வழங்கி பயனாளிகளுக்கு உதவிட வேண்டுமென அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், கும்முடிப்பூண்டி, பெத்திக்குப்பம் சோதனைச் சாவடியில், வெளிமாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களில் பறவைக்காய்ச்சல் நோய்தடுப்பு கிருமி நாசினி மருந்து (குளோரின் டை ஆக்சைடு) தெளிப்பதை பார்வையிட்டு,

அங்கு தேவையான அளவு கிருமி நாசினி மருந்து இருப்பில் உள்ளதா என்பதையும், அப்பணியினை செவ்வனே மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். இந்த ஆய்வின் போது கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு.டி. ஆபிரகாம், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி. பலராமன், திரு.கே.எஸ். விஜயக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**